

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கடலூர் மாவட்டம், குமாராட்சி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட செட்டிக்கட்டளை பகுதியில் நியாய விலைக்கடையை திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் திரு. ம.சிந்தனைசெல்வன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் இரா.சரண்யா , சிதம்பரம் சார் ஆட்சியர் ரஷ்மி ராணி உட்பட பலர் உள்ளனர்.

# அரவக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியில் பொதுமக்களின் கோரிக்கை மனுக்கள்!

## அமைச்சர்கள் வி. செந்தில்பாலாஜி - மா.மதிவேந்தன் பெற்றுக்கொண்டனர்!

கரூர், டிச. 30 -

மின்சாரம், மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மரு. மா.மதிவேந்தன் ஆகியோர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் தலைமையில் கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களை நேரில் சந்தித்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்கள்.

மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் செந்தில் பாலாஜி தெரிவித்தாவது

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டு மக்களின் நலனிற்காக பல்வேறு சிறப்பான நலத்திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். சட்டமன்ற தொகுதிகளில் தேர்வு செய்யப்பட்டு 20 இடங்களுக்கு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் நேரில் வருகை தந்துமனுக்களை பெற்றுள்ளார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 24 மணிநேரத்தில் 20 மணி நேரம் தமிழ்நாட்டு மக்களுக்காக ஓய்வறியாமல் உழைத்து கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் உள்ள பொதுமக்களுக்கு ஒரு இன்னல் என்றாலும் கூட நேரில் சென்று மக்களுக்கான தேவைகளை உடனடியாக பூர்த்தி செய்யக்கூடிய முதலமைச்சரையும், துணை முதலமைச்சரையும் நாம் பெற்றிருக்கிறோம். முதலமைச்சர் அவர்கள் கரூர் மாவட்டத்திற்கு அரசு வேளாண் கல்லூரி, மாவட்டத்தில் வேலை வாய்ப்பை உருவாக்கும் வகையில் 200 ஏக்கர் பரப்பளவில் சிப்காட் நிறுவனம் மற்றும் ஐடி பார்க் வழங்கியுள்ளார்கள். கடந்த மூன்று ஆண்டுகளில் 2 இலட்சம் விவசாயிகளுக்கு இலவசமின் இணைப்புகளை வழங்கி விவசாயிகளின் நலன் காக்கும் அரசாக திகழ்கிறது. அரசு நிலமற்ற எழை எளியோர்க்கு வீட்டு மனைகளையும் கொடுத்து அவற்றுக்கு பட்டாக்களையும் வழங்கி கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் மூலம் வீடுகளும் கட்டிடத் தரப்பட்டு வருகிறது. அந்த வகையில் கரூர் மாவட்டத்தில் 2024.25ஆம் ஆண்டில் கலைஞரின் கனவு இல்லத் திட்டத்தின் மூலம் பயனாளிகளுக்கு 749 வீடுகள் கட்டித் தரப்பட உள்ளது.

கிராமப்புறங்களில் குடிசை வீட்டில் வாழ்பவர்களுக்கு வீடுகள் பராமரிப்பு செய்வதற்காக 2000 பயனாளிகளுக்கு நிதிகள் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. கரூர் கோவை சாலை நான்கு வழிச் சாலையாக மாற்றுவதற்கான ரூ.110 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, அதற்கான பணிகள் நடைபெற்றுவருகிறது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கரூர் மாவட்டத்தின் வளர்ச்சித் திட்டப் பணிகளுக்காக கடந்த மூன்றரை ஆண்டுகளில் ரூ.2000 கோடி மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்து வளர்ச்சித் திட்டப் பணிகள் நடைபெற்றுள்ளது. அந்த வகையில் அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புஞ்சைதோட்டக்குறிச்சி பேரூராட்சி 5வது வார்டு குப்பம் ஊராட்சி நஞ்சைக் காளக்குறிச்சி ஊராட்சி ஆலமரத்துப்பட்டி ஊராட்சி மற்றும் ஈசநத்தம் ஊராட்சிக்குட்ப்பட்ட பகுதிகளில் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்கள் பெறப்பட்டுள்ளது.

இன்று பெறப்படும்அனைத்து மனுக்கள் மீது உடனடியாக பரிசீலனை செய்து தகுதியுடைய அனைவருக்கும் தமிழ்நாடு அரசின் நலத்திட்ட உதவிகளை விரைவாக வழங்குமாறு தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தெரிவித்தார்.

ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் தெரிவித்ததாவது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடைக்கோடியில் வசிப்பவருக்கு கூட தமிழ்நாடு அரசின் நலத்திட்ட உதவிகள் சென்று சேர வேண்டும் என்ற உயரிய எண்ணத்துடன் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். தேர்தல் வாக்குறுதிகளில் 90 சதவிகித வாக்குறுதிகளை நிறைவேற்றி விட்டார்கள். வாக்குறுதியில் சொல்லாத திட்டங்களையும் பல்வேறு புதிய திட்டங்களையும் மகளிர் மற்றும் தொழில் முனைவோர்கள் ஆகியோர் பயன்பாட்டிற்காகவும் எண்ணற்ற திட்டங் களை செயல்படுத்தி இருக்கிறார்கள்.

தமிழ்நாடு அரசின் மக்களை நாடி அவர்களின் குறைகளை தீர்க்க முதலமைச்சர் அவர்கள் பொது மக்களிடம் சென்று அனைத்து துறைகளை உள்ளடக்கிய மனுக்களை பெறும் மக்களுடன் முதல்வர் திட்டத்தை அறிமுகப்படுத்தி அரசு இயந்திரங்கள் மக்களை தேடி உங்களுக்கு அலைச்சல் கொடுக்காமல் அப்பகுதிகளுக்கே சென்று மனுக்களை பெற்று 30 நாட்களுக்குள் நடவடிக்கை மேற்கொள்ளும் இது ஒரு முத்தாய்ப்பான திட்டமாகும். தமிழ்நாட்டிலேயே முதன்முறையாக பொதுமக்களை சந்தித்து கோரிக்கை மனுக்கள் பெறும் நிகழ்ச்சி இன்றைய

தினம் கரூர் மாவட்டத்தில் தொடங்கப்பட்டுள்ளது. பெறப்படும் மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க மாவட்ட நிர்வாகத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திராவிட மாடல் ஆட்சியில் ஆதிதிராவிட மக்களுக்காக எண்ணற்ற திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். மிக முக்கியமாக ஒடுக்கப்பட்ட மக்கள் உயர்ந்து வாழ வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் தான் முதலமைச்சர் அவர்கள் திராவிட மாடல் ஆட்சியில் நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறார்கள். அதனடிப்படையில் ஆதிதிராவிட மக்களுக்கு இன்னும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்ற அடிப்படையில் தான் இந்த நிகழ்ச்சியை இன்று தொடங்கப்பட்டுள்ளது என்றார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. மாணிக்கம், (குளித்தலை). ஆர்.இளங்கோ (அரவக்குறிச்சி), க.சிவகாமசுந்தரி (கிருஷ்ணராயபுரம்), ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் ஸ்ரீலேகா தமிழ்செல்வன், கரூர் வருவாய் கோட்டாட்சியர் முகமதுபைசல், உதவி இயக்குநர் ஊராட்சிகள் சரவணன், தனித்துணை ஆட்சியர்(சமூக பாதுகாப்புத் திட்டம்) பிரகாசம் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திருவாரூரில் 12 புதிய கட்டிடங்கள்!

## பூண்டி கே.கலைவாணன் திறந்துவைத்தார்

திருவாரூர், டிச. 30 -

திருவாரூர் சட்டமன்ற தொகுதியில் திராவிட மாடல் அரசின் சாதனை திட்டங்களான 12க்கும் மேற்பட்ட புதிய கட்டிடங்களை மாவட்டக்கழக செயலாளர் பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ., தலைமை ஏற்று மக்கள் பிரதிகளின் முன்னிலையில் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளிலும் திராவிட மாடல் அரசின் சாதனை திட்டங்கள் ஒவ்வொரு மக்களுக்கும் சென்று சேர்ந்து,அனைத்து தரப்பினராலும் பாராட்டப்படுவது இந்திய துணைக் கண்டமே திரும்பி பார்க்கும் அளவுக்கு புகழ்பெற்றிருக்கிறது.மேலும் திருவாரூர் மாவட்டத்தின் அனைத்து பகுதிகளுக்கும் மக்கள் நலத்திட்டங்கள் மின்னல் வேகத்தில் நிறைவேற்றப்பட்டுவருவது மக்களின் பாராட்டினை பெற்றுவருகிறது.

இந்த வகையில்திருவாரூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கே.கலைவாணன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு வந்தன.

மன்னார்குடி கிழக்கு ஒன்றியத்தில் திருராமேஸ்வரம் வாழ்வாதார செயல்பாடுகள் மேற்கொள்வதற்கான கட்டிடம் , கொத்தங்குடி ஊராட்சி நியாய விலைக்கடை, திருவாரூர் ஒன்றியத்தில் தப்ளாம்புளியூர்பயணிகள் நிழற்குடை, வாஞ்சூரில் அங்கன்வாடி மையம்,, காரியங்குடி நியாயவிலைக்கடை, அடியக்கமங்கலம் ஊராட்சியில் ஆண்டிப்பாளையம் நியாயவிலைக்கடை, மேலத்தெருஅங்கன்வாடி மையம், கல்லிகுடி ஊராட்சியில் பொது விநியோக கட்டிடம், சமையற்கூடம், புலிவலம் ஊராட்சியில் புலிவலம் மற்றும் வேங்கடேஸ்வரபுரம் அங்கன்வாடி மையங்கள் ,வடகரை ஊராட்சியில் அங்கன்வாடி மையம், பள்ளி வார மங்கலத்தில் சமையற்கூடம், கொட்டரக்குடி ஊராட்சியில் மீ ன் மார்க்கட், குன்னியூர் ஊராட்சியில் மீன் மார்க்கெட் ,உமா மகேஸ்வரம் ஊராட்சியில் கீழதுரைக்குடி பொதுவிநியோக கட்டிடம் உள்ளிட்ட புதிதாக கட்டிமுடிக்கப்பட்ட கட்டிடங் களை சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கே. கலைவாணன் திறந்து வைத்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவந்தார்.

இந்த நிகழ்வுகளில் ஒன்றியக்குழு தலைவர் புலிவலம் ஏ.தேவா, ஒன்றிய செயலாளர் ஐ.வி.குமரேசன், தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.செல்வம் , சார்பு அணி நிர்வாகி சேனக்கரை கண்ணன் மற்றும் முன்னாள் இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் ராயல் ராதாகிருஷ்ணன், ஒன்றியக்குழு உறுப்பினர்கள், பாமா கண்ணன் , கார்த்திகா ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட ஊராட்சி மன்ற தலைவர்கள், வார்டு உறுப்பினர்கள், கழக தோழர்கள் பொதுமக்கள்,அரசு அதிகாரிகள் என பெருந்திரளானோர் பங்கேற்றனர்.



கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதியில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெரும் நிகழ்ச்சியில் பங்கேற்று மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி, ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் டாக்டர் மதிவேந்தன் ஆகியோர் மனுக்களை பெற்றனர். கரூர் மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர். இளங்கோ, இரா.மாணிக்கம், க. சிவகாமசுந்தரி, மற்றும் அதிகாரிகள் உடன் உள்ளனர்.



# நூறாவது பிறந்த நாளில் தோழர் நல்லகண்ணு

தகைசால் மனிதர் திரு. நல்லக்கண்ணு அவர்கள் ஏழை விவசாயி போன்ற எளிமைத் தோற்றம் கொண்டவர். திருவைகுண்டம் பகுதியில் ஏற்பட்ட பஞ்சத்தின் போது பதுக்கி வைத்திருந்த அரிசி மூட்டைகளை ஏழை பசியாளர்களுக்கு பிடுங்கியும், பிதுக்கியும் கொடுத்து பசிப்பிணி நீக்கியவர். வங்க பஞ்சத்தை (Bengal Famine)யும் இந்திய உணவு பற்றாக் குறையையும் போக்கி இந்தியாவை உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைய செய்த டாக்டர் எம்.எஸ்.சாமிநாதனுக்கு இணையானவர். இந்திய விடுதலை போராட்டத்தில் ஈடுபட்டு சிறையில் இருந்தபோது படித்த புத்தகங்களால் பொதுஉடைமைக்காரர் ஆகி, மீசை பொசுக்கப்பட்டாலும் ஆயுள் தண்டனையாகி அது 7 ஆண்டுகளாக குறைக்கப்பட்டாலும் சிறைவாசத்தை ஏப்பம் விட்டு வெளி வந்தவர். 2001 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் மக்கள் தலைவர் மூப்பனாரின் பிறந்தநாள் விழா. சென்னை காமராஜர் அரங்கில்.

80 ஜோடிகளுக்கு இலவச திருமணம். பீட்டரின் பெரும் முயற்சியால் மேடைக்கு வந்தார் மூப்பனார். மேடையில் இருந்த அனைவரும் அவருக்கு வாழ்த்துத் தெரிவித்தனர். அய்யா நல்லகண்ணு அவரது கைகளைப் பற்றி பிறந்த நாள் வாழ்த்துக்கள் என்றார். மூப்பனார் நல்லகண்ணுவிடம் உங்கள் வயது என்ன எனக் கேட்டார். உங்களை விட 2 வயது பெரியவன் என்றார். அப்படியே நில்லுங்கள் என்று கூறி தன் தோளில் போட்டிருந்த கதர் துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டு, நல்ல கண்ணுவின் கால்களில் சாஷ்டாங்கமாக விழுந்து என்னை ஆசிர்வதியுங்கள் என்றார். மூப்பனாரை தூக்கி நிறுத்தி கட்டித் தழுவிக் கண்ணீர் விட்டார் நல்லகண்ணு. மேடையில் இருந்த அனைவர் கண்களிலும் கண்ணீர். (நல்லகண்ணு அவர்களை உள்ளும் புறமும் நான் அறிவேன் அவரது மனிதம் மிக பிரமாண்டமானது என்பார் மூப்பனார்). இதில் யார் பெரியவர்? யார் பெரியார்?

முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தோழர் நல்லகண்ணுவின் 80வது ஆண்டு பிறந்த நாள் விழாவில் வாழ்த்தி பேசும் போது, என்னுடைய இரு கண்களில் ஒரு கண் நல்லகண்ணு தான். அவர் என்னை விட இரண்டு வயது இளையவர் என்பதால் எனக்கு அவர் தம்பி, அவரை நான் வாழ்த்துகிறேன். நம் அனைவரையும் விட அனுபவத்திலும் தியாகத்திலும் அவர் உயர்ந்தவர் என்பதால் அவரை நான் வணங்குகிறேன் என்றார் கலைஞர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 2022ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் தேதி சுதந்திர தின விழாவில் நல்லகண்ணு அவர்களுக்கு தகைசால் மனிதர் விருது வழங்கி, அவரை பெருமைப்படுத்தினார். அவருக்கு வழங்கிய 10 லட்சம் நிதியுடன் மேலும் ரூ.5000/- சேர்த்து ரூ.10,05,000/-த்தை மேடையிலேயே முதல்வரின் நிவாரண நிதியாக திருப்பி வழங்கினார் நல்லகண்ணு.

நல்லகண்ணு அவர்களுக்கு தமிழக அரசு அம்பேத்கார் விருது வழங்கி பெருமைப்படுத்தியது. இவ்விருதுடன் வழங்கப்பட்ட நிதியில் பாதியை கட்சி நிதியாகவும், மீதி 50 ஆயிரத்தை விவசாயிகள் சங்கத்திற்கு திருப்பி கொடுத்தார். 80-வது ஆண்டு பிறந்தநாள் விழாவில் கட்சியால் வசூலிக்கப்பட்டு நல்ல கண்ணுவிற்கு வழங்கிய 1 கோடி ரூபாயை கட்சி நிதியாக திருப்பி கொடுத்த தீரர் இவர். எந்த அரசாங்க பொறுப்பிலும் இல்லாதவர் இவர்.

கோவையில் நாடாளுமன்றத்திற்கும், திருப்பூரில் சட்டமன்றத்திற்கும் போட்டியிட்டு தோற்றாலும் கொள்கையில் அம்புபோல் வேகமாய் சீறிப்பாய்ந்து குறியீட்டை அடைபவர். திமுக தலைவர் கலைஞர் அவர்கள் தேர்தலில் நின்று ஜெயிக்க வாய்ப்பு இல்லாதவர்களை MLC ஆக்கி என்.வி.நடராஜன், மன்னை நாராயணசாமி போன்றவர்களை மந்திரியாக்கி அழகு பார்த்த மகத்தான தலைவர்.

அந்த வகையில் கலைஞர் அவர்கள் நல்லகண்ணு அவர்களுக்கும் கூட்டணி சார்பில் கொடுக்கப்படும் மாநிலங்களவை உறுப்பினர் பதவி கொடுத்து, அவருடைய எம்.பி. நிதியிலிருந்து அப்பகுதி மக்களுக்கு என்னென்ன நன்மைகள் செய்ய முடியுமோ அதைச் செய்யட்டும் என்ற விருப்பத்தில் இருந்தார். ஆனால் டெல்லியில் இருந்து திரு.ராஜா அவர்கள் கட்சியின் வேட்பாளராக அறிவிக்கப்பட்டார். இப்போதும் கெட்டுப் போகவில்லை. இதுபற்றி தோழர்கள் கலந்தாலோசித்து நல்ல முடிவு எடுத்தால் நலமே.

திரு. அய்யணன்அம்பலம் முன்னாள் MLC அகில இந்திய ஃபார்வர்டு பிளாக் தலைவர் அவர்கள் சென்னை Old MLA Hostelல் தங்கியிருப்பார். அடிக்கடி நான் அவரை பார்க்கச் செல்வேன். அடுத்த அறையில் திரு. நல்லக்கண்ணு அவர்கள் தங்கியிருப்பார். பெரும்பாலான நாட்கள் ஒன்றாக இருப்போம். ஒரு நாள் திருநெல்வேலி CPI மாவட்ட செயலாளர் திரு.க.செல்லைய்யா தனது மகனுடன் உங்களைப் பார்க்க வருகிறார் இருங்கள் என்றார் நல்லகண்ணு. திரு.செல்லைய்யா வந்தார்.திரு. செல்லையா, திரு. நல்லக்கண்ணு அவர்களுடன் ஜெயிலுக்கு சென்று 5 வருடத்தில் விடுதலை ஆகி பின் தலைமறைவாகி வாழ்ந்தவர். சேலம் ஜெயிலில் இருந்த 4 மாநில கம்யூனிஸ்ட் தொழிலாளர்களை 11.02.1950ல் போலீஸ் துப்பாக்கியால் சுட்டு ரத்த வெள்ளத்தில் கிடந்த கோபாலன் நம்பியார், வீரஞ்சேரி நாராயணன், நீலஞ்சேரி குஞ்சுமேனன் ஆகிய தோழர்களுடன் இறந்து கிடந்த 22 பிணங்களை எடுக்கும் போது, அதில் உயிருடன் தப்பிப் பிழைத்து வந்த ஒரே நபர் தான் இந்த செல்லையா என்று கூறினார் நல்லக்கண்ணு.

தனது மகன் C.பரத்வாஜ், (மும்பையில் ஜெயிலேயே இறந்த எங்களது தோழர் பரத்வாஜ் ருத்ர தத் நினைவாக இவனுக்கு இப்பெயர் வைத்தேன் என்றார்). ரஷ்யா மாஸ்கோவில் M.Sc., (Agri) படித்து முடித்தவன். வேலைக்காக தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தில் உதவி பேராசிரியர் பணிக்கு 7 முறை நேர்காணல் சென்றும் கிடைக்க வில்லை. ஜட்ஜ் ரத்தினவேல் பாண்டியன் அவர்கள் தி.மு.க. மாவட்ட துணைச் செயலாளராகவும், நான் CPI மாவட்ட துணைச் செயலாளராகவும் பணிபுரிந்தோம். பின்பு அவர் தி.மு.க. மாவட்டச் செயலாளராகவும், நான் திருநெல்வேலி CPI மாவட்ட செயலாளராகவும் பணியாற்றினோம். தமிழ்நாடு அரசில் வேளாண்மை அலுவலர் பணிக்காக சங்கத் தலைவரான உங்களை சென்று பார்க்கும்படி அனுப்பினார் என்றார்.

பரத்வாஜ் பணி விசயமாக நானும், திரு.அய்யணன் அம்பலம் அவர்களும், திரு.நல்லக்கண்ணு அவர்களும் சர்வீஸ் கமிஷன் அலுவலகம் சென்று பார்த்து அவர் முறையாக வேளாண்மை அலுவலர் பதவிக்கு விண்ணப்பித்து தஞ்சை மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டார். தஞ்சையில் திருத்துறைப்பூண்டிக்கு அருகில் கொற்கையில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையில் வேளாண்மை அலுவலராக பணியாற்ற உத்தரவு அனுப்பப்பட்டது. இன்றைய மாநிலச் செயலாளர் முத்தரசு, திருத்துறைப்பூண்டி அன்றைய MLA பழனிசாமி, பரத்வாஜ் ஆகிய மூவரும் கால்நடைப் பண்ணைக்கு சென்று பார்த்து விட்டு அந்த பணி வேண்டாம் என்று பரத்வாஜ் சொன்னதால் ஆடுதுறையில் வேளாண்மை அலுவலராக பரத்வாஜ் பணியேற்றார்.

ஆடுதுறை முன்னாள் அமைச்சர் கோ.சி.மணியார் அவர்களின் மேக்கிரி மங்கல வயலுக்கு விவசாயத்துறை அதிகாரிகள் யாருமே அ.தி.மு.க. ஆட்சியில் வருவதில்லை என்று வருத்தப்படுவார். மேக்கிரி மங்கல வயல்களையும் பரத்வாஜையே மேற்பார்வையிட சொன்னேன்.

மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் திருவைக்குண்டத்தில் உள்ள அரசு மருத்துவமனையை நவீனப்படுத்தவும் அதற்கு "நல்லக்க

"என்று பெயர் சூட்டியது மகிழ்விற்குரியது.

நல்லகண்ணு அவர்கள், தலைவர் கலைஞர் அவர் மீது வைத்திருந்த பாசம் பற்றியும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தகைசால் மனிதர் விருது வழங்கியது பற்றியும், கலைஞர் நாணயத்தை திரு.T.K.S. இளங்கோவன் மூலம் கொடுத்து அனுப்பியது பற்றியும் என்னிடம் நேரில் நன்றியுடன் நினைவு கூர்ந்த போது அவரது கண்கள் பனித்தன.

திரு.பழநெடுமாறன், வைகோ, திருமாவளவன், முத்தரசு, பாலகிருஷ்ணன் அனைவருமே நல்லகண்ணு அவர்களின் அன்புக்குப் பாத்தியப்பட்டவர்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
மு.க.ஸ்டாலின்
அவர்களே வருக! வருக!!

அக்ரி கணேசன்
மேனாள் செயலாளர்
அகில இந்திய வேளாண் பட்டதாரிகள் கூட்டமைப்பு புதுடெல்லி